Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.நா.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129806

1. District மாவட்டம் : **Tenkasi** — PS காவல்நிலையம்: **Vigilance and Anti Corruption** — Year ஆண்டு: **2025** — FIR No. முத.அ. எண்: **05/2025** — Date நாள்: **19.05.2025**

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended in Act 16 of 2018.** — Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: **12.05.2025** **16.45 hrs** — Date to நாள் வரை:
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் : — Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **13.05.2025** — Time நேரம் **08.15 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **13.05.2025** — Time நேரம் **08.15 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Tenkasi. 1 Km North East**
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **S.NAGARAJ** — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.SANGARPANDIAN**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **09.06.1978** — (d) Nationality : நாட்டினம் **INDIAN** — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **CORRESPONDENT** — (g) Address : முகவரி **108, PUDUMANI 6th St., SANKARANKOVIL, TENKASI DISTRICT.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr.Suresh Kumar, Superintendent, O/o the District Educational Officer, (Private School), Tenkasi.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No Delay.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 13.05.2025-ம் தேதி காலை 08.15 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் புதுமனை தெருவை சேர்ந்த திரு.S.நாகராஜ் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி தனியார் பள்ளிகள் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலக கண்காணிப்பாளர் திரு.சுரேஷ் குமார் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 13.05.2025-ம் தேதி காலை 09.15 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2025 u/s 7 of the PC Act 1988 as Amended in Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் S.நாகராஜ், வயது 46/25 த/பெ சங்கரபாண்டியன் 108, புதுமனை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

13.05.25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/5/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13/5/25 at 11.30hrs

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE எண் .....

6ம் தெரு, சங்கரன்கோவில் - 627756 தென்காசி மாவட்டம் பெறுனர் திரு காவல் ஆய்வாளர்அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை தென்காசி, ஐயா, நான் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் புதுமனை 6ம் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் திருவேங்கடம் தாலுகா செவல்குளம் கிராமத்தில் செயின்ட் பவுல் மெட்ரிக் மேல்நிலைபள்ளிளை 2012ம் ஆண்டு முதல் செயல்படுத்தி அதன் தாளாளராக பள்ளியை நிர்வகித்து வருகிறேன். எங்களது பள்ளியில் குலசேகரன்கோட்டையைச் சேர்ந்து திருமதி.M.பிரமிளா D.TEd., MA.Bed., என்பவர் 2015-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரை 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளுக்கு ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். அதன் பிறகு எங்கள் பள்ளியில் பணிபுரியவில்லை. தற்போது அவர் எங்கள் பள்ளியில் பணிபுரிந்த காலத்திற்கான பணி அனுபவ சான்று கேட்டு ஏப்ரல் மாதம் என்னிடம் விண்ணப்பித்திருந்தார். நானும் 28.04.2025-ம் தேதியில் பணி அனுபவச் சான்று தயார் செய்து, அதற்குரிய ஆவணங்கள் இணைத்து பணி அனுபவ சான்றில் தென்காசி மாவட்ட தனியார் பள்ளிகள் DEO-வின் Counter Sign-பெற்று அலுவலக நடைமுறைகள் முடித்து தருவதாக, கடந்த 30.04.25-ம் தேதியில் தென்காசி மாவட்ட தனியார் பள்ளிகள் DEO அலுவலகத்தில் சமர்ப்பித்திருந்தேன். அந்த அனுபவ சான்றினை பெறுவதற்காக கண்காணிப்பாளர் சுரேஷ்குமார் என்பவரை இரண்டு, மூன்று தடவை அலுவலகத்தில் சென்று பார்த்தேன். அப்போ வாங்க, இப்போ வாங்க என இழுத்தடித்து வந்தார். செல்போனிலும் பேசியுள்ளேன். அப்போதும் வேலை முடியவில்லை என்றே சொல்லிவந்தார். 09.05.2025ம் தேதி வெள்ளிக்கிழமை கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் அவரது செல்போன் எண்.9442317494-லிருந்து எனது செல்போன் எண்.9003779602ல் தொடர்பு கொண்டு பணி அனுபவ சான்றுக்கு ஒரு கடிதம் விடுபட்டுள்ளது, நேரில் வரும்போது சரிபண்ணி கொண்டு வருமாறும், வரும்போது ரூ.80,000/- கொண்டு வாருங்கள் என்று சொன்னார். நான் கண்காணிப்பாளர் பணம் கேட்டது பற்றி பிரமிளாவிடம் சொன்னபோது அவர் நான் உங்க பள்ளியில்தான் வேலைபார்த்தேன், நீங்கள்தானே எனக்கு சான்று தரவேண்டும், என்னிடம் அவ்ளோ பணம் இல்லை, நீங்கள் எனக்கு பார்த்து சான்று வாங்கி கொடுங்கள் என்று சொல்லிவிட்டார். 12.05.2025ம் தேதி காலையில் கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் எனது செல்போனில் தொடர்பு கொண்டு நான் கேட்ட பணமும், கடிதமும் ரெடிபண்ணிவிட்டீர்களா, நான் monday பெட்டிஷன் போகிறேன், மாலையில் அலுவலகத்திற்கு வந்து பாருங்கள் அல்லது பணத்தை என்னுடைய வீட்டில் வந்து கொடுங்கள் என்று சொன்னார். நான் சாரை நேரில் பார்க்கவேண்டியதிருக்கு சாயங்காலம் ஆபிஸ் வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டேன். மீண்டும் நேற்று 12.05.2025-ம் தேதி மாலை 4.45 மணியளவில் அவரது அலுவலகம் சென்று சுரேஷ் குமாரை சந்திந்து பிரமிளாவின் பணி அனுபவ சான்று சம்பந்தமாக பார்த்தபோது, அவர் கடிதமும், பணமும் பற்றி கேட்டார். நான் இந்த சான்று பிரமிளாவிற்குதான் போகும். அவர்தான் இந்த பணி அனுபவ

சான்று பெற்று அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிவதற்கு கேட்டுள்ளார். எனக்கு இதில் எதுவும் என்று சொன்னேன். அவரிடமும் பணம் கேட்டதை பற்றி சொன்னேன். அவரும் தன்னிடம் பணம் இல்லை, என்னையே பார்த்து வாங்கி தரசொல்லிவிட்டார். நீங்கள் பணம் கேட்டால் நான்தான் கொடுக்கவேண்டியதிருக்கு, என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.20,000/- குறைத்து ரூ.60,000/-ஐ நாளை 13.05.2025 காலையில் கொண்டு வந்து கொடுத்தால்தான், DEO கையெழுத்து போட்டு என்னிடம் தந்துள்ள சான்றிற்கு அலுவலகத்தில் நம்பர் எடுத்து பதிவு செய்து வேலையை முடித்து கொடுப்பேன் என்று கறாறாக சொல்லிவிட்டார். நானும் அப்போதைக்கு வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில், எனது பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியையின் DEO கையெழுத்து போட்ட பணி அனுபவ சான்றினை தருவதற்கு கண்காணிப்பாளர் சுரேஷ் குமார்-க்கு எதற்காக பணம் கொடுக்க வேண்டும், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என முடிவு செய்தேன். என்னிடம் எனது பள்ளியில் பணிபுரிந்த பிரமிளா ஆசிரியையின் பணி அனுபவ சான்றில் அலுவலக நடைமுறைகளை முடித்து தர லஞ்சமாக ரூ.60,000/- பணம் கேட்ட தென்காசி மாவட்ட தனியார் பள்ளிகள் DEO அலுவலக கண்காணிப்பாளர் சுரேஷ் குமர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.(NAGARAJ), 13.05.2025.

Sir, Received the complaint on 13.05.2025 at 08.15 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.05/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 13.05.2025 at 09.15 hrs sd.C.Jayasree, Inspector of Police, V&AC, Tenkasi. 13.05.2025.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி நீதிமன்றம் தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C

C. JAYASREE
INSPECTOR OF POLICE
V&AC TENKASI
13/5/25